6. மானியக் கோரிக்கைகள், 2017-2018, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

திரு. மு.க. ஸ்டாலின்:

'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்'

அதாவது செய்யக் கூடாததைச் செய்தாலும் கேடு ஏற்படும், செய்யவேண்டியதைச் செய்யாமல் விட்டாலும் கேடு ஏற்படும் என்று ஐயன் திருவள்ளுவர் எடுத்துச் சொல்லியிருப்பதைப்போல (மேசையைத் தட்டும் ஒலி) கூவத்தூரிலே தொடங்கி, தொடர்ந்து செய்யக்கூடாததை நீங்கள் செய்துகொண்டிருக்கிறீர்கள். செய்ய வேண்டியதைச் செய்யாமல் காலம் கடத்திக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) எனவே, மக்களால், தூக்கியெறியப்பட்டு, சரித்திரத்தின் ஓரத்திலே கிடத்தப்படுவீர்கள். அந்தக் கட்டம் வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உரையை சீக்கிரம் முடியுங்கள்.*

8. தடை செய்யப்பட்ட பொருளை அவையில் காண்பித்தது குறித்து—*தொடர்ச்சி*

திரு. மு.க. ஸ்டாலின்: *நிறைவாக, இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது என்னவென்றால், சென்னையில் இருக்கக்கூடிய கடைகளில் இன்றைக்கு ** பகிரங்கமாக விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதோ, நான் கையிலேயே எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களில் பெரும்பாலானோர் ** உள்ளிட்டவற்றையும், சில புகைப்படங்களையும் உயர்த்திக் காண்பித்தனர்.)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் அந்தக் கருத்தோடு உரையை முடியுங்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*